THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.

Register No.

**FSB**

4390–19

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019.

(Five-year Regular Course)

Fourth Year — Seventh Semester

LABOUR LAW — II

Time : Three hours    Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. When the employer is liable to pay compensation under the Employees' Compensation Act 1923?

   1923-ம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீடு சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்க முதலாளி எப்போது பொறுப்பாகிறார்?

2. Define Bonus, and explain the calculation of bonus as per Full Bench formula.

மீதூதியம் என்றால் என்ன என வரையறுக்கவும், மேலும் முழு நீதிப்பேராயம் வகுத்துள்ள முறையின் படி மீதூதியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை விளக்கவும்.

3. Explain the salient features and scope of the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் பணியாளர் குழாம் சட்டத்தின் சிறப்பு இயல்புகள் மற்றும் நோக்கெல்லையை விளக்குக.

4. Explain the important provisions of the Payment of Gratuity Act 1972.

1972-ம் ஆண்டைய பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் முக்கிய பிரிவுகளை விளக்குக.

5. Explain the various schemes provided under the Employee's Provident Fund Act 1952.

1952-ம் ஆண்டு தொழிலாளர் வைப்புநிதித் திட்டத்தின் கீழ் வரும் வெவ்வேறு வகையான திட்டங்களை விளக்குக.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Manufacturing process.

உற்பத்தி முறை.

(b) Forfeiture of bonus.

மீதூதியத்தைப் பறிமுதல் செய்தல்.

(c) Employment of children in factories.

தொழிற்சாலையில் சிறுவர்களை பணியில் அமர்த்துதல்.

(d) Medical benefit under the E.S.I. Act.

தொழிலாளர் காப்பீட்டு கழக சட்டத்தின் கீழ் மருத்துவ நலன்.

(e) Controlling Authority under the Payment of Gratuity Act, 1972.

1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தும் அதிகாரக் குழு.

(f) Occupier of a factory.

ஆக்கத் தொழிலக பற்றுடைமையர்.

(g) Maternity benefit.

மகப்பேறு பயன்.

(h) Annual leave with wages.

ஊதியத்துடன் ஆண்டு விடுமுறை.

(i) Available surplus.

கிடைக்கப்படும் உபரித் தொகை.

(j) Partial disablement.

பகுதி ஊனம்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Krishnakumar who was working in a saw mill had to frequently cut the timbers with saw. When he was working in the mill on March 2015, suddenly he fell ill. He was taken to the hospital where it was found that he got lung infection. He filed an application for compensation under the Employees' Compensation Act, 1923. Decide.



மரம் அறுக்கும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் கிருஷ்ணகுமார் என்பவர் மரம் அறுக்கும் தொழிலை அடிக்கடி செய்தல் வேண்டும். மார்ச் மாதம் 2015 அன்று இவ்வாறு மரம் அறுக்கும் போது தீடீரென்று உடல் நிலை குன்றியது. அவரது நுரையீரல் பாதிக்கப்பட்டிருப்பதாகப் பரிசோதித்த மருத்துவர்கள் கூறுகின்றனர். கிருஷ்ணகுமார் பணியாட்கள் இழப்பீடு சட்டத்தின் கீழ் இழப்பீடு கோருகிறார் - முடிவு செய்க.

8. A notice of dismissal is given by an employer to 'A', an employee, during the period 'A' is in receipt of sickness benefit under the E.S.I. Act. Discuss the effect of the notice of dismissal given to 'A' by the employer.

'அ' என்ற தொழிலாளி தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் நோய்கால நலன்கள் பெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் முதலாளி பணி நீக்க அறிவிப்பு கொடுத்தார். இவ்வறிவிப்பின் செயல் திறனை விவாதிக்கவும்.

9. A is an employee working in a factory. He sustained injuries during the course of his employment. He applied for compensation under the Employees' State Insurance Act, 1948. Expecting that he would get more compensation under the Employees' Compensation Act, he again applied under the Employees' Compensation Act, 1923- Decide.

ஏ என்பவர் பணி புரியும் போது ஏற்பட்ட காயத்திற்காக தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோருகிறார். பின்பு பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் அரசுக் காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் தொகையை விட, அதிகம் இழப்பீடு கிடைக்கும் என எதிர்பார்த்து பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழும் இழப்பீடு கோருகிறார் - முடிவு செய்க.

10. Gopal was working in an oil mill. Along with other workers Gopal was dismissed from service for participating in strike with those workers. On the date of dismissal, oil mill announced annual bonus. Whether Gopal is entitled for bonus from the oil mill or not, decide.

கோபால் என்பவர் ஒரு எண்ணெய் நிறுவனத்தில் வேலையில் பணிபுரிகின்றார். அவர் வேலை நிறுத்தத்தில் பல தொழிலாளர்களுடன் பங்கு பெற்றதற்காக அவரையும் அத்தொழிலாளர்களையும் எண்ணெய் நிறுவனம் வேலையிலிருந்து நீக்கிவிடுகிறது. வேலையிலிருந்து கோபாலை நீக்கிய அன்று வருடாந்திர மீதூதியத்தை எண்ணெய் நிறுவனம் அறிவிக்கின்றது. கோபாலுக்கு மீதூதியம் கிடைக்குமா அல்லது கிடைக்காதா முடிவு செய்க.



11. XYZ Cinema theatre facilities provided for parking of two wheelers and cycle stand through a contractor. There are about 12 workers working in the cycle and two wheelers stand. The ESI regional office issued notice to deduct the contribution of insurance premium amount from the salary of workers under the contractor. The XYZ Cinema theatre management refused to deduct the insurance premium on the ground that the cycle stand has been permitted to function under a contractor. Is this refusal valid? Explain.

XYZ என்ற சினிமா தியேட்டரில் அங்கு வரும் வாடிக்கையாளருக்கு ஒரு ஒப்பந்தகாரர் மூலமாக சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்துவதற்கு அனுமதித்திருந்தனர். அந்த சைக்கிள் ஸ்டான்டில் 12 பேர் வேலையில் இருந்தனர். தொழிலாளர் அரசு காப்பீட்டு அலுவலகம் தொழிலாளர்களிடம் அரசு காப்பீட்டு தொகை பிடித்தம் செய்ய உத்திரவிட்டது. XYZ தியேட்டர் உரிமையாளர் சைக்கிள் நிறுத்துமிடம் ஒப்பந்தக்காரருக்கு அனுமதியளித்தது என்றும் தொழிலாளர் அரசு காப்பீட்டு அலுவலகம் அனுப்பிய அறிவிப்பிற்கு இணங்க செலுத்த வேண்டியதில்லை என நிராகரித்தது. அது நிலைக்கத்தக்கதா? விளக்கவும்.

12. A laundry is attached with Medical college and hospital. Twenty workmen employed in the laundry were engaged in washing the clothes used in the Hospital. Decide whether the laundry is a factory.

மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒன்றுடன் சலவைச் சாலை இணைக்கப்பட்டிருந்தது. அதில் வேலை செய்த 20 தொழிலாளிகள் மருத்துவமனையின் துணிகளை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்பட்டனர். சலவைச் சாலை தொழிற்சாலையா இல்லையா என்பதை தீர்மானிக்கவும்.

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.

Register No. : | | | | | | | | |

**FSB**

4280–19

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

B.A., B.L./B.A. LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019.

(Five-year Regular Course)

Fourth Year — Seventh Semester

LABOUR LAW — II

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. "Accidents arising out of and in the course of employment" - Discuss with reference to the Employees Compensation Act.

"வேலைவழி மற்றும் வேலையில் இருக்கும்பொழுது ஏற்படும் விபத்துக்கள்" இதனை தொழிலாளர்கள் நஷ்ட ஈடு சட்டத்தின் கீழ் ஆராய்க.

2. Explain the salient features of the Employees Provident Fund Act, 1952 and state the establishments exempted from the Employees Provident Funds Act?

1952 ஆண்டின் கீழ் தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி திட்டத்தின் முக்கிய பயன்களை விளக்கி தொழிலாளர் எதிர்கால வைப்பு நிதிச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள தொழிலகங்கள் யாவை என கூறுக.

3. State the provisions of the Factories Act 1948 relating to safety of workmen.

1948ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில், தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்த சட்டப்பிரிவுகளை கூறுக.

4. Explain the concept of Bonus. How "Available surplus" is computed under the Act?

மிகையூதியம் என்ற கோட்பாட்டினை விளக்குக. "எஞ்சியுள்ள உபரி" இத்தொகையினை எவ்வாறு மிகையூதியச் சட்டத்தின் கீழ் கணக்கெடுக்க வேண்டும்.

5. Explain the salient features of the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் தொழிலகங்கள் சட்டத்தின் சிறப்பு அம்சங்களை விளக்குக.



## PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Occupational disease.

தொழிற்சார்ந்த நோய்கள்.

(b) Customary bonus.

வழக்கமான மீதூதியம்.

(c) Gratuity.

பணிக்கொடை.

(d) Maternity Benefit.

பேறுகால சலுகை.

(e) Benefits under the ESI Act 1948.

1948 ஆம் ஆண்டைய பணியாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் நலன்கள்.

(f) Social Insurance.

சமூக காப்பீடு.

(g) Inspector of factories.

தொழிற்சாலைகள் ஆய்வாளர்.

(h) ILO on social security.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமூக பாதுகாப்பு.

(i) Definition of factory.

தொழிற்சாலை வரையறு.

(j) Deposit linked insurance schemes.

காப்பீட்டு திட்டத் தொடர்பான வைப்பீடு.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to Provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் 2 பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Murugan was suffering from a heart disease. Fire broke out in the factory because of short circuit. Murugan ran up the stairs and disconnected the electrical main connection to putout the fire. He was collapsed of heart failure during the process. Whether his dependants can claim compensation - Decide.



முருகன் ஒரு இருதய நோயாளி. மின்சார கோளாறினால் தொழிற்சாலையில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. நெருப்பை அணைக்கும் முயற்சியில் முருகன் பல படிகள் ஏறி மின்சாரத்தின் பிரதான இணைப்பை துண்டிக்க சென்றார். அவருடைய இருதயம் நின்று இறந்து விட்டார். அவரைச் சார்ந்தவர்கள் நஷ்டஈடு பெற முடியுமா? முடிவு செய்க.

8. A company was running a factory at Bangalore and the company also established a hospital exclusively for the benefit of its employees. There were 15 persons employed by the company including a Doctor and a Nurse – Decide whether the ESI was applicable to the hospital.

பெங்களூரில் ஒரு தொழிற்சாலையை நடத்தி வந்த நிறுவனமானது தன்னுடைய பணியாளர்களின் நலனுக்காக ஒரு மருத்துவமனையை உருவாக்கியது. அங்கு ஒரு மருத்துவர் மற்றுமொரு செவிலியர் உட்பட 15 நபர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். மருத்துவமனைக்கு பணியாளர் காப்பீட்டு சட்டம் பொருந்துமா? தீர்மானிக்க.

9. Ragu was dismissed from service on the grounds of fraud, and violent behaviour in the premises of the establishment. As per Section 9 of the Payment of Bonus Act not only he was disqualified for receiving bonus but also dismissed from service for the accounting year and the past years remained unpaid to him. Decide the right to forfeit bonus for the guilty of misconduct.

ஒரு நிறுவனத்தில் ஏமாற்றுதல், கொடூர நடவடிக்கை காரணமாக ரகு என்பவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். மீதூதிய சட்டம் பிரிவு 9ன் கீழ் அவர் ஏற்கனவே மீதூதியம் வழங்காத ஆண்டிற்கும் தற்போதுள்ள கணக்காண்டிற்கும் மீதூதியம் பெற தகுதி இழப்பதுடன் பணியிலிருந்தும் நீக்கப்படுகிறார். அவர் தவறான நடத்தைக்காக மீதூதியம் பெறும் தகுதியை இழக்கின்றாரா? தீர்மானிக்க.

10. Vinoth an apprentice working in a factory, while cleaning a dangerous part of an unfenced machine died. Decide the liability of the employer.

தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் வினோத் என்ற பணி பயில்பவர் வேலியிடப்படாத இயந்திரத்தின் ஆபத்தான பாகத்தினை சுத்தம் செய்யும் போது இறந்துவிடுகிறார். பணியாண்மையரின் கடப்பாட்டினை முடிவு செய்க.

11. Kavitha is an employee of a factory. During her pregnancy, the employer of the factory dismissed her for misconduct. She claimed maternity benefit but the employer refused - Decide.

கவிதா என்பவர் ஒரு ஆக்கத் தொழிலகத்தில் பணி புரிந்து வரும் ஒரு பணியாளர். அவர் கருவுற்றிருக்கும்போது அந்த ஆக்கத் தொழிலக பணி வழங்குநர் ஒழுக்க கேட்டிற்காக அவரை பணி நீக்கம் செய்கிறார். இந்நிலையில் கவிதா மகப்பேறு பயன் கோருகிறார். ஆனால் பணி வழங்குநர் அதனை மறுக்கிறார். தீர்மானிக்க.



12. A bus conductor named Saravanan due to the nature of his duty having great strain both mentally and physically died of heart attack after working hours, while he was sleeping in the bus – Will an employer is liable for compensation for the dependants of the deceased workman – Decide.

சரவணன் என்ற பேருந்து நடத்துனர் மனதளவிலும் உடலளவிலும் பணிப்பளுகாரணமாக பணிநேரம் முடிந்து பேருந்தில் உறங்கிக் கொண்டிருக்குபோது மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விடுகிறார். பணியாண்மையர் பணியாளரின் வாரிசுகளுக்கு இழப்பீடு வழங்க பொறுப்புடையவரா - தீர்மானிக்க.

---

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.

Register No.

FSB

4100–18

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Fourth Year — Seventh Semester

LABOUR LAW — II

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the term "accident arising out of and in the course of employment" – Refer to leading cases.

"பணியின் மூலம் மற்றும் பணிபுரியும் போது ஏற்படும் விபத்து" விளக்கம் தருக. முக்கிய வழக்குகளை சுட்டிக்காட்டுக.

2. Explain the constitution, power and duties of the Employees State Insurance Corporation, Standing committee and the Medical benefit council under the Act.

தொழிலாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் கீழ் உள்ள கழகம், நிலைக்குழு, மற்றும் மருத்துவ நலக் குழு ஆகியவைகளின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் அமைப்பு முறைகள் யாவை விளக்குக.

3. Discuss the restrictions under the Factories Act for employment of women and children.

தொழிற்சாலைகள் சட்டத்தில் பெண்களையும் சிறுவர்களையும் வேலைக்கு ஈடுபடுத்துதல் பற்றி உள்ள கட்டுப்பாடுகள் பற்றி விவரி.

4. Define 'Bonus'. Explain how is bonus calculated.

"மீதூதியம்" என்பதை வரையறு. மீதூதியம் எவ்வாறு க்ணக்கிடப்படுகிறது.

5. Discuss the nature of the right of maternity benefit under the Maternity Benefit Act.

பேறுகால சலுகைச் சட்டத்தின் கீழ் பேறுகால சலுகை உரிமையின் இயல்பினை விளக்குக.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) "Full Bench Formula".

முழு நீதிப்பேராயம் வகுத்துள்ள முறை.

(b) Tamil Nadu Shops and Establishment Act.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்.

(c) Permanent partial disability.

பகுதியளவு நிலையான ஊனம்.

(d) Provident Fund.

எதிர்கால வைப்பு நிதி.

(e) Manufacturing process.

உற்பத்தி முறை.

(f) Appointment of welfare officer.

நலன் அதிகாரியை நியமித்தல்.

(g) Working hours.

வேலை நேரம்.

(h) Forfeiture of bonus.

மீதூதியம் பறிமுதல்.

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

(i) Deposit Linked Insurance Scheme.

காப்பீட்டு திட்டத் தொடர்பான வைப்பீடு.

(j) Employees State Insurance Court.

தொழிலாளர் அரசு காப்பீட்டு நீதிமன்றம்.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Raman was waiting 15 feet away from the main gate of the factory to report for the 3rd shift. At that time he was knocked down by a passing Auto and injured. Can he claim compensation? Decide.

ராமன் மூன்றாவது ஷிப்ட் வேலைக்கு வருவதற்கு மெயின் கேட்டுக்கு 15 அடி வெளியே காத்துக் கொண்டு இருந்தார். அப்போது அந்த பக்கம் சென்ற ஆட்டோ மோதி காயமடைந்தார். அவர் நஷ்ட ஈடு கேட்க முடியுமா? – முடிவு செய்க.

8. The management of PSK college and some other institutions had challenged the notification on 1st March 1982 about the applicability of the EPF Act to the educational institutions. Whether Provident Fund Act is applicable to the educational institutions – Decide.

PSK நிருவாகம் மற்றும் சில நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களுக்கு பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி சட்டம் பொருந்துமா என்ற 1982ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் தேதி வெளியிட்ட அறிக்கை குறித்து வாதிட்டது. வருங்கால வைப்பு நிதி சட்டம் கல்வி நிறுவனங்களுக்கு பொருந்துமா? – ஆய்க.

9. Kasthuri, a newly appointed lady worker, was working in the leave vacancy. She worked only for few days in that calendar year. She claimed maternity benefit after her delivery. The management refused – Decide.

கஸ்தூரி என்ற பெண் தொழிலாளி ஒருவர் புதிதாக காலியாகவுள்ள விடுப்பு இடத்தில் பணியமர்த்தப்பட்டார். அந்த காலண்டர் வருடத்தில் சில நாட்களே பணிபுரிந்தார். தனக்கு குழந்தை பிறந்த பின்னர் தனக்கு மகப்பேறு சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்று கோரினார். நிருவாகம் அதற்கு மறுத்தது. முடிவு காண்க.

10. Krishnan, an employee of Bangalore Steel Company on attaining the age of superannuation retired on 30.5.17 after twenty eight years of continuous service. His last pay drawn was Rs. 9,000 per month. Is he entitled to claim gratuity?

பெங்களூர் ஸ்டீல் நிறுவனத்தின் தொழிலாளியான கிருஷ்ணன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 28 வருட தொடர் பணிக்குப் பிறகு 30.5.17ல் பணி நிறைவு செய்தார். அவர் இறுதியாக பெற்ற ஊதியம் மாதம் ஒன்றுக்கு 9,000 ஆகும். அவர் பணிக்கொடை கோர இயலுமா?

11. Elumalai the workman who was on duty, had gone to the canteen to take tea, there he died – Will the employer be liable for payment of compensation? Decide.

ஏழுமலை என்ற பணியாளர் பணியில் இருக்கும் போது சிற்றுண்டி உணவகத்திற்கு தேநீர் அருந்த சென்றவிடத்து அங்கேயே இறந்து விடுகிறார். பணியாண்மையர் இழப்பீடு வழங்க பொறுப்புள்ளவரா? – தீர்மானிக்க

12. Kandan, a workman of a factory, while travelling in a bus specially provided by the employer, on the way the bus met with an accident and he was seriously injured and later died. His widow claimed compensation – Decide.

கந்தன் என்னும் தொழிற்சாலையில் பணிபுரியும் ஒரு தொழிலாளி தங்களுக்கென்று பணியாண்மையர் அளித்த பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். செல்லும் வழியில் பேருந்து விபத்துக்குள்ளாகியது. கந்தன் மிக மோசமாக காயமடைந்து பிறகு இறந்து விடுகிறார். அவரின் விதவை இழப்பீடு கோருகிறார் – தீர்வு காண்க.

———————

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.